**கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும்**
**நீர்ப்பாசன அமைச்சு**

# நெல் சந்தைப்படுத்தும் சபை

# பதவி வெற்றிடங்கள்

நெல் சந்தைப்படுத்தும் சபையில் நிலவும் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்), சட்ட அதிகாரி / பணிப்பாளர் சபை செயலாளர், கணக்காளர், உதவிக் கணக்காளர் பதவிகளை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) - (HM 1-1) - 01 பதவி

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் முகாமைத்துவம், வியாபாரம் அல்லது அரச நிர்வாகம், வர்த்தகமாணி, பொருளியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **அத்துடன்**

   குறித்த துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் / பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ'' மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதவிக்கு இயைபான துறையில் பதினைந்து (15) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ'' மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதவிக்கு இயைபான துறையில் பதினைந்து (15) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

   இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு அதிகாரியாகவிருத்தல்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

   **அல்லது**

2. ''முகாமைத்துவ'' (MM) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால குறித்த துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

கட்டாயத் தகைமை:

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் சேவைக் காலத்தினுள் சகல சம்பள உயர்வுகளையும் நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் அந்தக் காலப்பகுதியினுள் ஒழுக்காற்று தண்டனைகளை பெற்றிருக்கக் கூடாது.

**(இ) சம்பள முறை:**

HM 1-1 - 2025 ரூபா (140,640 - 15x4,100 - 202,140)

**(ஈ) வயதெல்லை:**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**(உ) ஏனைய தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

i. இலங்கைப் பிரஜைகளாகவிருக்க வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

## சட்ட அதிகாரி/ பணிப்பாளர் சபை செயலாளர் - (MM 1-1) - 01 பதவி

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சட்டமாணிப் பட்டமொன்றுடன் இலங்கை சட்டக் கல்லூரியினால் வழங்கப்படும் சட்டமாணி கற்கை நெறியைக் கற்று மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்த ஒருவராகவிருத்தல்.

  **அத்துடன்**

- அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் இயைபான துறையில் இரண்டு (02) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

  **அல்லது**

- தொழில்முறை சட்டத்தரணியொருவராக மூன்று (03) வருடகால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த பரிச்சயம் மற்றும் கணனி பயன்பாடு தொடர்பான தேர்ச்சி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**(இ) சம்பள முறை:**

MM 1-1 - 2025 ரூபா (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,240)

(2025-03-25ஆம் திகதிய 1/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

**(ஈ) வயதெல்லை:**

25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## கணக்காளர் (MM 1-1) 01 பதவி

**(அ) தகைமைகள்**

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

  **அல்லது**

- ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

  **அல்லது**

- ஐக்கிய இராச்சிய பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

  **அல்லது**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் முகாமைத்துவம் அல்லது வர்த்தகமாணி பட்டம்

  **அல்லது**

- உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா

  அத்துடன்

- அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது நிதி நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**குறிப்பு:**

ஆங்கில மொழி தொடர்பில் சிறந்த பரிச்சயம் மற்றும் கணனி பயன்பாடு தொடர்பான தேர்ச்சி, நிர்வாகம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் விளம்பரம் போன்ற விடயங்கள் தொடர்பிலான அறிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

**(இ) சம்பள முறை:**

MM 1-1 - 2025 ரூபா (91,690 - 10x2,480 - 15x3,450 - 168,240)

(2025-03-25ஆம் திகதிய 1/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

**(ஈ) வயதெல்லை:**

25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

## உதவிக் கணக்காளர் - (JM 1-1) - 02 பதவிகள்

**(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணக்கியல் பாடம் சகிதம் முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் போன்ற துறையொன்றில் பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டத்துடன் அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் ஒரு (01) வருடகால அனுபவம்.
2. பதவிக்கு இயைபான விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் குறித்த விடயத்துறையில் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமை (பின்வரும் 1 அல்லது 2)**

1. இயைபுடைய துறையின் பதவியொன்றில் கணக்கியல் உதவியாளர் வகுதியில் அல்லது முகாமைத்துவ உதவியாளர் கணக்கு நடவடிக்கைகளுக்கு இயைபாக ii.ஆம் தரத்தில் ஐந்து (05) வருடகால அனுபவம்.
2. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**(இ) சம்பள முறை:**

JM 1-1 - 2025 ரூபா (72,650 - 10x1,360 - 18x2,040 - 122,970)

(2025-03-25ஆம் திகதிய 1/2025ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

**(ஈ) வயதெல்லை:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பொதுவான விடயங்கள்**

- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்து சகிதம்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் பதவிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- சுய தரவு தகவல்களை உள்ளடக்கி தம்மால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் சகிதம் உறவினரல்லாத இருவரின் தகவல்களை உள்ளடக்கி 2025-11-03ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் / அல்லது எழுத்து மூலமான போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
- நியமனம் தொடர்பில் அழுத்தங்களைப் பிரயோகித்தல் / பொய்யான தகவல்களை வழங்குதல் தகைமையீனத்துக்கு காரணமாகும்.
- நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை,**
**வீடமைப்பு பொதுச் செயலகக் கட்டிடம், 6ஆம் மாடி,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**